[24th April 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : I remember to have answered a similar question on the floor of this House at Madras. There is no legal ban in their using the prefix ' Dr.' to their names so long as it does not create any bad or adverse effects. If any particular difficulty is brought to the notice of the Government it will be looked into.

SRI N. K. PALANISAMI : கனம் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது இன்னும் ஹோமியோபதியை ரிகக்னேஸ் செய்வது பற்றி இன்னும் பரிசீலனை முடியவில்லை என்று சொன்னார்கள். அப்படி தாமதம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதை இதுவரையில் ரிகக்னேஸ் செய்யவில்லை. அப்படிச் செய்ய வேண்டுமென்றால் அதற்கு கொஞ்சம் பார்மாலிட்டிஸ் இருக்கின்றன. அது நடந்துகொண்டிருக்கின்றன.

SRI S. LAZAR : சாதாரணமாகக் கிராமப் புறங்களில் முக்கியமாக ஹோமியோபதி டாக்டர்களோ அல்லது வேறு வைத்தியர்களோ கையாளக் கூடிய முறை சரியாக இருக்கிறதா என்பதைக் கண்காணிப்பதற்கு அல்லது அதை அப்போதைக்கப்போது கவனிக்க ஏதாவது ஏற்பாட்டை அரசாங்கம் செய்திருக்கிறதா ? அப்படி இல்லை யென்றால் அதைக் கவனிக்க ஏதாவது ஒரு தனிப்பட்ட போர்டோ அல்லது ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தரையோ நியமிப்பதற்கு சர்க்கார் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த மாதிரி சரியான முறையில் பயிற்சி பெறாத வைத்தியர்கள் வைத்தியம் செய்வதால் ஒன்றும் விபரீதமான முடிவு ஏற்படவில்லை. ஏனெனில், சாதாரணமாக நோய்களுக்குத்தான் அவர்கள் மருந்து, மாத்திரைகள், கஷாயம் போன்றவைகள் கொடுக்கிறார்கள்.

SRI A. VEDARATHNAM : ஒரு மாதப் பயிற்சி பெற்ற ஹோமியோபதி வைத்தியர்கள் டாக்டர் என்று தங்கள் முன்னால் பட்டம் வைத்துக்கொள்வதால், நான்கு வருடங்கள் வைத்தியக் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்ற டாக்டர்களுக்கு அவர்கள் இணையாவார்கள் என்ற தப்பபிப்பிராயம் ஏற்பட இடம் கொடுக்கும் அல்லவா ? அதை நிறுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையல்லவா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ஆமாம். அப்படியிருக்கிறது. நமது அவையில் கூட ஒரு பெண் அங்கத்தினருக்கு டாக்டர் என்ற பட்டம் பத்திரிகையில் பார்க்கிறேன். இந்த ஹோமியோபதி ரிகக்னிஷன் ஆனபிற்பாடு இதற்கு வேண்டிய விதிகள் ஏற்படும்.

Leyland buses

* 130 *Q.*—SRIMATHI KOLANTHAI AMMAL (on behalf of SRIMATHI T. N. ANANDANAYAKI) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) how many Leyland buses of the State Transport Department are under repairs; and

(*b*) how long they have been in shed?

24th April 1959]

THE HON. SRI R. VENKATARAMAN : (a) Forty-four (44) Leyland buses were under repairs as on 20th March 1959.

(b) The vehicles have been off the road for periods indicated below :—

Period.	*Number of vehicles.*
1 Less than one month.	Twenty three (23).
2 Over one month but less than two months.	Twelve (12).
3 Over two months	Nine (9).

SRI A. A. RASHEED : When were these vehicles bought and what were the causes for their breakdown?

THE HON. SRI R. VENKATARAMAN : These were purchased on different dates but the reason for their not being in use are :

Annual overhaul	8
Brake-certificate repairs	6
Monthly maintenance	4
Other repairs	5
Total ...	23

Over one month and over two months are due to lack of spare parts.

SRI J. MATHA GOWDER : இந்த பழுதடைந்த பஸ்களில் சென்ற வருடம் திராவிட முன்னேற்றக் கழகத்தினரால் நடத்திய போராட்டத்தின் விளைவாக தீ எறிக்கப்பட்ட பஸ்களும் இதில் சேர்க்கப்பட்டிருக்கிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இல்லை.

SRI T. T. DANIEL : May I know whether we are getting enough of Leylands for maintenance and how these are purchased, whether there is any commitment that the Government should purchase only these two models and not other models of buses?

THE HON. SRI R. VENKATARAMAN : After careful examination of all models Government decided to go in for these two models only, namely, Leyland Comet and Mercedes Benz. This restriction helps in the purchasing of spare parts and in improving technical skill of workers because they have to attend to only two models. Therefore, Government decided to go in only for these two models.

SRI K. B. S. MANI : இந்த பஸ்கள், நல்ல வசதிகள் இருந்தும் கூட, அடிக்கடி அதிகம் பஸ்கள் ரிப்பேராவதற்குக் காரணமென்ன ? தொழிலாளர்கள் மூலமாகவோ அல்லது மற்ற காரணங்கள் இருந்தாலும்

[24th April 1959

கூட ஸ்பெயர் பார்ட்ஸ் வரவில்லை அதனுல்தான் அப்படி என்று சொன்னுர்கள். சர்க்காருக்கே ஸ்பெயர் பார்ட்ஸ் கிடைக்கவில்லை என்று சொன்னுல் மற்ற ப்ரைவேட் பஸ் ஓனர்களுக்கு ஸ்பெயர் பார்ட்ஸ் கிடைப்பதில் எவ்வளவு கஷ்டமிருக்கும்? ஆகவே, இந்த ஸ்பெயர் பார்ட்ஸ் அதிகம் கிடைக்கச் செய்வதற்கு ஏதாவது வகை செய்யப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: சர்க்கார் துறையில் நடத்துவதிலும் கஷ்டம் இருக்கிறது. தனி முதளாளிகள் என்றுல் என்ன விலை கொடுத்தாவது, எங்கிருந்தாவது வாங்கி விடலாம். ஆனுல் சர்க்காருக்கு, டெண்டர் கூப்பிட்டு லோயஸ்ட் டெண்டர் வரும் வரையில் பஸ்களை ஓடாமல் வைத்து இருக்க வேண்டியிருக்கிறது. சட்டப்படி அதுவரை ஓட்ட முடியாது. Back lag of arrears. பல வருடங்கள் நின்று போயிருக்கிறது. அடுத்த வருடத்தில் நாம் இப்போழுது புதிதாகஅமைத்திருக்கிற கொள்கைப்படி, புதுப்பிக்கும் கொள்கை இருப்பதால் அது ஒன்றிரண்டு வருடங்களில் நிவர்த்தியாகிப் போய்விடும்.

SRI K. SATTANATHA KARAYALAR: இந்த லேலண்ட் பஸ்களின் ஆயுள் காலம் எவ்வளவு? மெர்ஸிடஸ் பென்ஸ், ஒரு வண்டி எவ்வளவு காலத்திற்கு உழைக்கும்?

THE HON. SRI R. VENKATARAMAN: எட்டு வருடம் ஒரு லேலண்ட் டைகர் ஓடும், குறைந்த பட்சம் அது. நல்ல முறையில் வைத்திருந்தால் இன்னும் கூடுதல் ஒன்றிரண்டு வருடங்கள் ஓடும். மெர்ஸிடஸ் பென்ஸின் ஆயுட்காலம் ஏழு வருடம். அதையும் கொஞ்சம் அதிகமாக ஓட்ட முடியும். மைலேஜ் கணக்கு என்னிடம் இல்லை.

SRI S. LAZAR: இந்த பஸ்கள் பழுதடைந்திருந்தது, நமது சர்க்கார் பஸ்கள் மட்டும்தான் அதிக நாட்கள் பழுதடைந்திருந்தனவா? அல்லது தனி நபர்களின் பஸ்களும், அதாவது இந்த லேலண்ட் பஸ்களும் இதேமாதிரி இருந்ததா?

THE HON. SRI R. VENKATARAMAN: அதன் கணக்கு என்னிடம் இல்லை. அவர்கள் ஸ்பெயர் பார்ட்ஸ்க்காக நம்மிடம் லைசென்ஸ்க்கு ரெக்கமன்டேஷனுக்கு வருவதில் இருந்து அவர்கள் நிலைமையும் அப்படித்தான் என்று தான் தெரிகிறது.

SRI P. S. CHINNADURAI: பஸ்கள் விரைவில் பழுதடைந்து விடுவதற்கு, அதிகப்படியான பிரயாணிகளை ஓட்டிச் செல்வது ஒரு காரணமா? அப்படியானுல் ஸ்டான்டிங் பாஸன்சேர்ஸ்ரயை ஏற்றுவதை நிறுததுவதற்கு வழி செய்யப்படுமா?

THE HON. SRI R. VENKATARAMAN: அதுவும் ஒரு காரணம் தான். ஆனுல் சென்னை நகரில் ஸ்டான்டிங் பாஸஞ்சேர்ஸை நாம் ஏற்றவில்லை என்ற நிலைமையை உண்டாக்கினுல் ரகளைதான் வந்துவிடும்.

SRI A. VEDARATHNAM: அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட எட்டு வருட காலத்திற்கு பிறகுதான் இப்பொழுது குறிப்பிட்ட இந்த பஸ்கள் எல்லாம் பழுதடைந்திருக்கிறதா? அல்லது அதற்கு முன்னுலேயே பழுதடைந்திருக்கிறதா? அப்படி முன்னுலேயே என்றுல் அதற்குக் காரணமென்ன?

THE HON. SRI R. VENKATARAMAN: ஒவ்வொரு பஸ்ஸும் கீழ் கண்டபடி ரிப்பேருக்கு அனுப்ப வேண்டும். ஆன்வல் ரிப்பெயருக்கு வருடத்திறகு ஒரு தடவை அனுப்ப வேண்டும். ப்ரேக் செர்டிபிக்கட்டுக்கு வருடத்திற்கு இரண்டு தடவை அனுப்பவேண்டும். பின்னர் மந்திரி

24th April 1959]

ரிப்பெயருக்கு ஒரு நாள் அனுப்பவேண்டும். இன்று வாங்கின பஸ்ஸாக இருந்தாலும் கூட அதை மன்த்லி ரிப்பெயருக்கு மாதந்தோறும் அனுப்ப வேண்டும், ப்ரேக் சர்டிபிக்கட்டுக்கு அனுப்ப வேண்டும், ஆன்வல் ரிப் பெயர்க்கும் அனுப்ப வேண்டும்.

Madras Legislative Assembly Session at Ootacamund

*131 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether there is any proposal to purchase any buildings at Ootacamund other than Arranmore Palace for holding Assembly Sessions; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI P. KAKKAN : (*a*) There is no such proposal at present.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI : வேறு கட்டிடம் வாங்காவிட்டாலும், தமிழகத்தையாவது விஸ்தரித்து ஒவ்வொரு வருஷமும் சட்ட சபையை இங்கு நடத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : பொறுத்திருந்து பார்த்துத் தான் பின்னால் சொல்ல முடியும்.

SRI J. MATHA GOWDER : நீலகிரியில் இருக்கக்கூடிய மக்கள் எல்லோரும் சட்ட சபையை குறைந்தது இரண்டு மாதங்களுக்காவது இங்கு நடத்த வேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆகையால் இந்தக் கட்டி டத்தை விஸ்தரித்து நிரந்தரமாக இங்கு சட்டசபை நடப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இதுபற்றி ஆலோசனை செய்துதான் பிற்பாடு முடிவு செய்யப்படும்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இந்த விஷயத்தில் சர்க்கார் தனியாக எந்த விதமான முடிவும் எடுப்பதாக இல்லை. அங்கத்தினர்கள் எந்த விதத்தில் கருதுகிறார்களோ அந்த விதத்தில் முடிவு எடுப்பதாக இருக்கிறது.

Deep bore-wells for Udayarpalayam taluk

*132 *Q.*—SRI S. RAMALINGA PADAYACHI : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலுகாவில் எத்தனை ஆழத் துளை கிணறுகள் போடப்பட்டன ?

(ஆ) அதில் எத்தனை கிணறுகளில் தானாகத் தண்ணீர் வெளி வரு கின்றது ?

(இ) பாக்கியிருக்கும் கிணறுகளில் இருந்து தண்ணீர் எடுப்பதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றனவா ?

(ஈ) அப்படியிருந்தால் அதன்மேல் அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது ?